


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் முதற்கட்டமாக பல்வேறு மாவட்டங்களில் 2002.21 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு அளித்ததற்காக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 பயனாளிகள் சந்தித்து, மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர். இந்நிகழ்ச்சியின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ். முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ். சமீரன் ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசின் "தேசிய நல்லாசிரியர் விருது" பெற்ற வேலூர் மாவட்டம், இராஜகுப்பம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி இடைநிலை ஆசிரியர் இரா. கோபிநாத் குடும்பத்தினருடன் சந்தித்து, விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ். மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், ஒன்றிய அரசின் "தேசிய நல்லாசிரியர் விருது" பெற்ற மதுரை, இலட்சுமிபுரம், டி.வி.எஸ் மேல்நிலைப் பள்ளியின் மேல்நிலை தொழிற்கல்வி ஆசிரியர் நிலை – 1 இரா.சே. முரளிதரன் குடும்பத்தினருடன் சந்தித்து, விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். இந்த நிகழ்வின்போது, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பள்ளிக்கல்வித் துறை செயலாளர் திருமதி. எஸ். மதுமதி, பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் ச. கண்ணப்பன் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) சென்னை, எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, அதன் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின் போது, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், துணை முதலமைச்சரின் செயலாளர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. பெ. அமுதா, பேரிடர் மேலாண்மை இயக்குநர் வ.மோகனச்சந்திரன், உள்ளிட்ட துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.




சென்னை, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் (04.10.2024) நடைபெற்ற தமிழ்நாடு உடற்கல்வியியல் மற்றும் விளையாட்டுப் பல்கலைக் கழகத்தின் பதினான்காவது பட்டமளிப்பு விழாவில், தமிழ்நாடு ஆளுநர் ஆர். என். ரவி மாணவ, மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறப்பு விருந்தினர் பத்ம ஸ்ரீ திருமதி. அனிதா பால்துரை, துணைவேந்தர் பேராசிரியர் மு.சுந்தர் மற்றும் ஆட்சிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருக்கோயில்கள் அர்ச்சகர்களின் மகன் - மகள்களின் மேற்படிப்புக்கு கல்வி உதவித் தொகை:

# 500 மாணவர்களுக்கு - ரூ.50 லட்சத்திற்கான வரைவோலைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, அக். 6 -

ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வி உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் ரூ.50 இலட்சத்திற்கான வங்கி வரைவோலைகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை மூலம் செயல்படுத்தப்படும் ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்கான கல்வித் உதவித்தொகையாக 500 மாணவர்களுக்கு மொத்தம் 50 இலட்சம் ரூபாய் வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு தலா ரூ.10,000/க்கான வங்கி வரைவோலைகளை வழங்கினார்.

இந்து சமய அறநிலையத்துறை தனது நிர்வாக கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு, குடமுழுக்குகள் நடத்துதல், பக்தர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல், திருக்கோயிலுக்குச் சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்தல், திருக்கோயில் பணியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்களின் நலன்களை பாதுகாத்தல் போன்ற பல்வேறு பணிகளை சீரிய முறையில் மேற்கொண்டு வருகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களுக்கு தினசரி பூசைகள் நடத்திட வழங்கப்பட்ட வைப்பு நிதி ரூபாய் ஒரு லட்சத்திலிருந்து இரண்டு இலட்சமாக உயர்த்தப்பட்டு, 12,959 திருக்கோயில்களுக்கு ஒரு தவணையில் ரூ.130 கோடி அரசு மானியம் வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து கடந்த 3 ஆண்டுகளில் 4,041 நிதி வசதியற்ற திருக்கோயில்கள் ஒருகால பூசைத் திட்டத்தில் இணைக்கப்பட்டு, தற்போது 17,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக அரசு நிதி ரூ.210.41 கோடி வழங்கப்பட்டுள்ளதோடு, அத்திருக்கோயில்களின் மின் கட்டணத்திற்காக ரூ.6 கோடியில் மைய நிதி ஏற்படுத்தப்பட்டு மின் கட்டணம் துறையின் மூலம் செலுத்தப்பட்டு வருகிறது. மேலும், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களின் அர்ச்சகர்களுக்கு முதன் முறையாக மாதந்தோறும் ரூ.1,000/ ஊக்கத் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

2024 - 2025 ஆம் நிதி யாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையில், "ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணியாற்றும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் நலன் கருதி, இவ்வாண்டு 500 மாணவர்களுக்கு மேற்படிப்பிற்காக தலா ரூ.10,000/ கல்வி உதவித் தொகை வழங்கப்படும்" என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினைச் செயல்படுத்திடும் வகையில், ஒருகால பூசைத் திட்ட திருக்கோயில்களில் பணிபுரிந்து வரும் அர்ச்சகர்களின் மகன் மற்றும் மகள்களின் மேற்படிப்பிற்காக பள்ளி மற்றும் கல்லூரிக் கல்வி மேம்பாட்டு மைய நிதி மூலம் கல்வி உதவித் தொகையினை 500 மாணவர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக 10 மாணவர்களுக்கு ரூ.10,000/க்கான வங்கி வரைவோலைகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் வழங்கினார்.

இதன்மூலம் அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் கலை மற்றும் அறிவியல், பொறியியல், மருத்துவம், சட்டம் போன்ற உயர்கல்வி பயிலும் அர்ச்சகர்களின் பிள்ளைகள் பயன்பெறுவர். கடந்தாண்டு இத்திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 24.11.2023 அன்று 400 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந்தரமோகன்,1 இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என். ஸ்ரீதர், கூடுதல் ஆணையர்கள் டாக்டர் இரா.சுகுமார், திருமதி சி.ஹரிப்ரியா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உள்ளம் திறந்து உரையாடினோம்!

# பல எண்ணங்களைப் பரிமாறிக்கொண்டோம்!



முகாம் அலுவலகத்தில்
மாண்புமிகு முதலமைச்சரை
மரியாதை நிமித்தமாகச்
சந்தித்தேன்

அவரது அண்மைக்காலத்
தொடர் வெற்றிகளுக்கு
வாழ்த்துச் சொன்னேன்

25 நிமிடங்கள்
உள்ளம் திறந்து
உரையாடினோம்

ஒரு நல்ல
உரையாடல் என்பது
நேர்த்தியான நெறிமுறைகள்
கொண்டது

ஒரே மாதிரியான ஈடுபாடு
இருவர்க்கும் வாய்க்க வேண்டும்

அறையின் கதவுகள் பூட்டப்பட்டு
இருதயத்தின் கதவுகள்
திறந்திருக்க வேண்டும்

ஒருவர் பேசிமுடித்து
முற்றுப்புள்ளி வைக்கும் வரையில்
அதை ஊடறுக்காத
உரையாடல் நாகரிகம் வேண்டும்

இந்த மூன்றும் உடையவர்
முதலமைச்சர்

அமெரிக்கா முதல்
அப்பல்லோ வரையில்

பிரதமர் முதல்
துணைமுதல்வர் வரையில்
அமைச்சரவை மாற்றம் முதல்
அரசியல் விமர்சனம் வரையில்

தாழ்ப்பாள் இல்லாத தமிழில்
பல்வேறு எண்ணங்கள்
பரிமாறிக்கொண்டோம்

ஓர் ஆட்சியாளனுக்குரிய
ஒரே ஒரு பெரும்பலம்
'உற்சாகம்'

அந்த உற்சாகம் குறையாமல்
உலா வாருங்கள் என்று
வாழ்த்தி விடைகொண்டேன்

முதலமைச்சர் வீட்டுக் காஃபியில்
நுரைகளுக்கு மேல்
தெளித்திருந்த டிகாஷன்
இன்னும்
நறுஞ்சுவையோடு
நாக்கில் இருக்கிறது

நன்றி

**- கவிப்பேரரசு
வைரமுத்து**